## 2.76 ஊராட்சி ஒன்றியங்களில் 599 தொழில் நுட்ப உதவியாளர்களின் முறையற்ற நியமனம் குறித்து மேல் நடவடிக்கை

ஊரக வளர்ச்சி (இ5) துறை

கடிதம் (1D) எண் . 664 நாள் : 28.12.2001

அனுப்புநர்
திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப.,
அரசு செயலாளர்

பெறுநர்
ஊரக வளர்ச்சி இயக்குநர்

பார்வை : 1. மதுரை மாவட்டம் தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய தொழில்நுட்ப உதவியாளர்கள் சங்கத்தின் 14.7.99 மற்றும் 29.7.99 நாளிட்ட மனுக்கள்.
2. ஊரக வளர்ச்சி இயக்குநர் கடித எண்.101879/98/EE3 நாள். 24.7.2000, 6.2.2001 மற்றும் 2.4.2001

ஊராட்சி ஒன்றியங்களில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி பணிகளை மேற்பார்வையிட தொழில் நுட்ப உதவியாளர்கள் (Technical Assistants) மற்றும் வேலை உதவியாளர்கள் (Work Assistants) தினக்கூலி அடிப்படையில் கடந்த காலத்தில் நியமனம் செய்யப்பட்டனர். இவ்வகை நியமனம் அரசாணை எண்.93, ஊரக வளர்ச்சித்துறை நாள்.26.3.97–ல் அரசால் தடை செய்யப்பட்டுள்ளது. மேற்படி அரசாணை வெளியிடுவதற்கு முன்னர் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தொழில் நுட்ப உதவியாளர்கள் மற்றும் வேலை உதவியாளர்களை ஊரக வளர்ச்சி பொறியியல் பிரிவில் நியமனம் செய்யுமாறு மதுரை தமிழ்நாடு ஊராட்சி ஒன்றிய தொழில் நுட்ப உதவியாளர்கள் சங்கம் தனது 14.7.99 நாளிட்ட மனுவில் அரசைக் கோரியிருந்தது.

2, மேற்குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கையின் மீது ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டது. ஊரக வளர்ச்சி இயக்குநர் 2.4.2001 நாளிட்ட தனது அறிக்கையில் இவ்வகைப் பணியாளர்களின் நியமனம் குறித்து கீழ்க்காணும் விவரங்களை அரசுக்கு அனுப்பியுள்ளார்.

| | தொழில்நுட்ப உதவியாளர்கள் | வேலை உதவியாளர்கள் |
|---|---|---|
| 1. வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்யப்பட்டவர்கள் | 3 | – |
| 2. நியமனம் செய்யப்பட்டவர்களில் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் | 331 | 199 |
| 3. நியமனம் செய்யப்பட்டவர்களில் வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்யாதவர்கள் | 24 | 45 |
| | **358** | **244** |
| **மொத்தம்** | | **602** |

மேற்படி பணியாளர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் சாலை ஆய்வாளர்களாக மறுநியமனம் செய்யலாம் என ஊரக வளர்ச்சி இயக்குநர் 24.7.2000 நாளிட்ட தனது அறிக்கையில் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

3. இந்நிகழ்வை அரசு நன்கு ஆய்வு செய்தது. மேலே பத்தி 2–ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணியமர்த்தப்பட்டுள்ள 602 பணியாளர்களுள் 3 பணியாளர்கள் மட்டுமே வேலை வாய்ப்பகம் மூலம் முறையாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மீதமுள்ள 599 பணியாளர்களின் நியமனம் முறையற்ற நியமனம் ஆகும். இவர்களுள் சிலர் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். சில நிகழ்வுகளில் தீர்ப்பாயம் இடைக்கால தடையும் விதித்துள்ளது. அரசாணை எண்.93 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26.3.97–ல் இவ்வகை நியமனம் அரசால் தடை செய்யப்பட்டுள்ளதாலும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 599 பேர்களின் நியமனம் முறையற்ற நியமனம் என்பதால் அரசு கீழ்க்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையிடுகிறது என்பதனை தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளேன்:–

## 2. IMPORTANT G.Os

1. இந்த 599 பணியாளர்களில், தீர்ப்பாயத்தில் வழக்கு தொடுத்து தடை உத்தரவு பெற்றுள்ளவர்கள் நீங்கலாக மற்றவர்கள் எவரும் பணியில் நீடித்தால் அவர்களை பணிநீக்கம் செய்யலாம்.

2. தீர்ப்பாயம் தடை வழங்கியுள்ள வழக்குகளில் தடையினை நீக்க உரிய துரித நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

3. தீர்ப்பாயம் வழங்கும் தீர்ப்பின் அடிப்படையில் இந்த வகை பணியாளர்களின் மறு நியமன கோரிக்கையை ஆராயலாம்.

4. முறையற்ற நியமனங்களில் தொடர்ந்து பணியாற்ற காரணமான நியமன அலுவலர், சரிபார்ப்பு அலுவலர் மற்றும் ஆய்வு அலுவலர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

4. மேலே பத்தி 3ல் அறிவுறுத்தியவாறு மாவட்ட ஆட்சியர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொண்டு, தொகுப்பு அறிக்கை ஒன்றினை இரண்டு மாத காலத்திற்குள் அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு செயலாளருக்காக